## .மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
## அசல் வழக்கு எண். 413 /2018

PW1 – சண்முகராஜ் த/பெ பூவாலிநாட்டார்
நாள்–27.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

தாவா சொத்து வானகிரி கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனாரும் 1–ம் பிரதிவாதியின் தாத்தாவான பூவாலிநாட்டார் பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். பூவாலிநாட்டார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். பூவாலிநாட்டார் மனைவியும் எனது தாயாருமான தனவல்லி இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தில் மாடி வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள மாடிவீடு 1–ம் பிரதிவாதியின் தகப்பனாரான வைரக்கண்ணுவால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

1–ம் பிரதிவாதியின் தகப்பனார் ஊராட்சிமன்ற தலைவராக இருந்தபோது தனது செல்வாக்கை பயன்படுத்தி தாவா சொத்தின் பட்டா அவரது பெயரில் மாற்றிக்கொண்டது சம்மந்தமாக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பட்டா பெயர் மாற்றம், வகைபாடு மாற்றம் மற்றும் புல எண் மாற்றும் குறித்து இவ்வழக்கிலும் நான் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டது குறித்து வருவாய் துறையில் அதை ரத்து செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு தெரியவந்த பிறகு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே 1–ம் பிரதிவாதியின் தகப்பனாரான வைரக்கண்ணுவிற்கு தாவா சொத்தைப் பொறுத்து உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு, உயில் ஆவணமானது நடைமுறைக்கு வந்து அதன் அடிப்படையில் தான் தாவா சொத்திற்கான வருவாய் துறை ஆவணங்கள் 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் மாற்றம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த உரிமையின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கும் பாகம் இருப்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்தில் எனக்கு பாக உரிமை இருப்பின் பாகப்பிரிவினை கோரிதான் அசல் வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றும், ஆவணங்களை பொறுத்து செல்லாது என விளம்புகை கோர உரிமை இல்லை. தாவா சொத்தைப் பொறுத்து எனது தகப்பனார் உயில் ஆவணம் எழுதி வைத்தது எனக்கு தெரியும் என்றும், அதனால் தான் நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பூவாலிநாட்டாரின் இதர வாரிசுகள் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

வழக்குச் சொத்தைப் பொறுத்து ஏற்கனவே உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதால் தான் பூவாலிநாட்டாரின் வாரிசுகள் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஆவணத்தை செல்லாது என கோரும் நான் ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்லும் 1–ம் பிரதிவாதியின் தகப்பனாரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் இவ்வழக்கின் அவசிய தரப்பினர் என்றும் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்க தவறிய குறைக்கு உள்ளாகியுள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்து உயிலுக்கு பிறகு எங்களின் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும், 1–ம் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல.

தாவா சொத்தில் நான் கூட்டு அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் 1–ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஏற்படுத்தி கொடுத்த விவரம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 2018–ம் வருடம் ஆகும். தாவா சொத்து குறித்து வில்லங்க சான்று பெற்றுப்பார்த்ததின் அடிப்படையில் தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ள நான் அவ்வாறு எவ்வித வில்லங்க சான்றும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தைப் பொறுத்து 1–ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு உயில் படி தனிப்பட்ட உரிமை உள்ளது என்றும், 1–ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்திக்கொடுத்த 07.08.2018–ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் இறந்து சுமார் 40 வருடங்கள் ஆகும். தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை இருந்திருப்பின் எனது தகப்பனார் இறந்த உடன் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றும் அதனால் தான் இதுநாள்வரையில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தைப் பொறுத்து எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது உரிமை மூலம் குறித்து எவ்வித பரிகாரமும் கேட்காமல் ஆவணத்தைப் பொறுத்து மட்டும் செல்லாது என விளம்புகை கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. அவசியமற்ற தரப்பினை சேர்த்ததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

தாவா சொத்தைப் பொறுத்து 1–ம் பிரதிவாதி உண்மையான உரிமையாளர் என்றும் அவருக்கு எதிராக எவ்வித ஆவணங்களையும் ஏற்படுத்தக்கூடாது என கோரியுள்ள உறுத்துக்கட்டளையானது செல்லாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா வீட்டு வரி ரசீது 1–ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றப்பட்டு நடைமுறைக்கு வந்துவிட்டது என்றாலும் சரியல்ல. 07.08.2018 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது என்பதால் அதைப்பொறுத்து செல்லாது என பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1–ம் பிரதிவாதி ரெங்கநாதன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அண்ணனின் மூத்தமகன் ஆவார். வழக்கு சொத்து சம்பந்தமாக எனக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் தான் கருத்துவேறுபாடு இருந்து வருகிறது என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதிக்கு எதிராக எவ்வித கருத்துவேறுபாடும் இல்லை என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். எவ்வித பரிகாரமும் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக கோரப்படாததால் 2–ம் பிரதிவாதி இவ்வழக்கின் அவசியமற்ற தரப்பினர் என்றும் அதனாலேயே இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரனை இல்லை.</u>**